

# ICON இணையப்பக்க வழிகாட்டி:
## தடுப்பூசியேற்றப் பதிவுகளை ICON இல் எப்படி உள்ளிடுவது


1. [toronto.ca/StudentVaccines](toronto.ca/StudentVaccines) இற்குச் சென்று **Report or Access Vaccination Records** என்பதைக் கிளிக் செய்யவும்





2. **'Get Started!'** என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும்.





3. நீங்கள் எந்த வகையான சாதனத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.




4. ஏற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாட்டுக் கொள்கையை வாசித்து, **'I Accept'** என்பதை அல்லது **'I Do Not Accept'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். நீங்கள் ஏற்றுக்கொள்ளவிட்டால், தயவுசெய்து 416-338-7600 என்ற இலக்கத்தைத் தொடர்புகொண்டு,மேலதிக உதவிக்கு 'நோயெதிர்ப்புத் திறனூட்டலுக்காக விருப்பத்தெரிவு 2 ஐத் தேர்ந்தெடுக்கவும்'.





5. உங்கள் பிள்ளையின் ஒன்ராறியோ சுகாதார அட்டை இலக்கம் (OHCN) மற்றும் பிற விபரங்களை (பெயர் மற்றும் பிறந்த திகதி உட்பட) அல்லது உங்கள் பிள்ளையின் ஒன்ராறியோ நோயெதிர்ப்புத் திறனூட்டல் ID (OIID) இலக்கத்தை உள்ளிட்டு நோயாளியை உறுதிப்படுத்தவும். நீங்கள் தகவல்களை உள்ளிட்டதும், "**Verify ID**" அல்லது "**Verify Patient**" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். உங்களுக்கு டொராண்டோ பொதுச் சுகாதாரத்திடமிருந்து (TPH) ஒரு கடிதம் வந்திருந்தால், OIID இலக்கம் என்பது 10 இலக்கமாகும், அதை மேல் வலது மூலையில் காணலாம். உங்களிடம் ஒரு OIID இலக்கம் இல்லையென்றால், 416-338-7600 என்ற இலக்கத்தைத் தொடர்புகொண்டு 'நோயெதிர்ப்புத் திறனூட்டலுக்கு விருப்பத்தெரிவு 2 ஐத் தேர்ந்தெடுக்கவும்'.




6. தடுப்பூசியேற்றங்களைப் பார்ப்பதற்கு,
   - தடுப்பூசியேற்றப் பதிவேடு யாருடையது என்பதைத் தேர்ந்தெடுக்கவும்:
     - **Dependent** = நீங்கள் 15 வயதுக்கும் குறைவான ஒரு பிள்ளையின்/மாணவரின் பெற்றோர்
     - **Me** = நீங்கள் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒரு மாணவர்
   - PIN ஐ உள்ளிட்டு **'Verify Patient'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் PIN ஐ மறந்துவிட்டால், **'Forgot PIN'** என்பதைக் கிளிக் செய்யவும்.

*கவனத்திற் கொள்ளவும்: நீங்கள் தவறான PINகளை பலமுறை உள்ளிட்டால், நீங்கள் ICON இலிருந்து தடுக்கப்படலாம். மேலதிக உதவிக்காகத் தயவுசெய்து 416-338-7600 ஐ அழைக்கவும்.*




7. நீங்கள் பிள்ளையின்/மாணவரின் பதிவேட்டில் இருந்தால், தேவையான தடுப்பூசியேற்றங்களின் பட்டியலை நீங்கள் காண்பீர்கள். உதாரணமாக:

- குக்கல்
- தொண்டைக்கரப்பான்
- ஈர்ப்புவலி


8. விடுபட்ட தடுப்பூசியேற்றங்களை உள்ளிடத் தொடங்குவதற்கு, **'Submit Immunization'** என்பதைக் கிளிக் செய்யவும்.




9. உங்களுக்கு TPH இலிருந்து ஒரு கடிதம் கிடைத்திருந்தால் **'Yes'** என்பதையும், கிடைக்கவில்லை என்றால் **'No'** என்பதையும் தேர்ந்தெடுக்கவும்.
10. நீங்கள் உள்ளிடும் அனைத்து நோயெதிர்ப்புத் திறனூட்டல்களையும் ஒன்ராறியோவில் பெறப்பட்டிருந்தால் **'Yes'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். ஒன்ராறியோவுக்கு வெளியே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடுப்பூசிகள் பெறப்பட்டிருந்தால் **'No'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும் அல்லது உங்களுக்குத் தெரியாவிட்டால் **'Unsure'** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.




11. நீங்கள் தடுப்பூசியேற்றங்களை ICON இல் உள்ளிடப் போகும் வடிவமைப்பை உள்ளிடவும் (திகதி அடிப்படையில் அல்லது தடுப்பூசியேற்றத்தின்/பிராண்டு பெயரின் அடிப்படையில்)
12. நீங்கள் உள்ளிடும் நோயெதிர்ப்புத் திறனூட்டலின் வடிவமைப்பைத் தெரிவு செய்யவும்: திகதி/மஞ்சள் அட்டை மூலம் குழுவாக்கப்பட்டது அல்லது நோயெதிர்ப்புத் திறனூட்டல் பதிவேடு மூலம் குழுவாக்கப்பட்டது.






நீங்கள் எந்த விருப்பத்தெரிவைத் தெரிவு செய்தாலும் பின்பற்றும் படிமுறைகள் ஒரே மாதிரியாக இருக்கும்.

13. **'Add a Date & Immunization'** என்பதைக் கிளிக் செய்யவும். உங்கள் திரையில் ஒரு பொப்அப் தோன்றும், அதில் நீங்கள் நோயெதிர்ப்புத் திறனூட்டல் தகவல்களை உள்ளிடலாம்.




14. தடுப்பூசியேற்றம் வழங்கப்பட்ட திகதியை உள்ளிடவும். நீங்கள் திகதியை உள்ளிட்டதும், **'Immunization/Brand Name'** உள்ளிடவும். நீங்கள் ட்ரொப்டவுனில் பெயரைப் பார்த்தவுடன், அதைக் கிளிக் செய்யவும்.





ஒன்ராறியோ பொது நிதியுதவி செய்யப்பட்ட நோயெதிர்ப்புத் திறனூட்டல் அட்டவணை இரண்டு மாத வயதில் தொடங்குகிறது. நோயெதிர்ப்புத் திறனூட்டல் திகதிகள் மற்றும் பிராண்ட் பெயரை உள்ளிடும்போது, திரையின் பக்கப் பேனலை, மஞ்சள் அட்டையை அல்லது வழங்கப்பட்ட விளக்கப்படத்தைப் பார்க்கவும்.

15. நோயாளியின் தகவல்களை உறுதிப்படுத்தவும்.

16. 'சமர்ப்பிப்பவரின் தகவல்' திரையில் உள்ள எல்லாத் தரவுப் புலங்களிலும் உள்ளிடவும். **'Save and Proceed to Review'** என்பதைக் கிளிக் செய்யவும்.




17. மதிப்பாய்வு செய்து எல்லாத் தகவல்களும் சரியானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். **'Submit Immunizations'** என்பதைக் கிளிக் செய்யவும். உங்கள் குறிப்புக்காக ஒரு கண்காணிப்பு இலக்கத்தை நீங்கள் பெறுவீர்கள்.



| Age at Vaccination | Vaccines | Vaccine/Brand Name | Product Name |
|---|---|---|---|
| 2 months | Diphtheria, Tetanus, Pertussis, Polio, Haemophilus influenzae type b | DTaP-IPV-Hib | Pediacel or Pentacel or Infanrix-IPV/Hib |
| | Pneumococcal Conjugate 13 | Pneu-C-13 | Prevnar 13 |
| | Pneumococcal Conjugate 15 | Pneu-C-15 | Vaxneuvance |
| | Rotavirus | Rot-1 | Rotarix |
| | | Rot-5 | RotaTeq |
| | | Rota | N/A |
| | | | |
| 4 months | Diphtheria, Tetanus, Pertussis, Polio, Haemophilus influenzae type b | DTaP-IPV-Hib | Pediacel or Pentacel or Infanrix-IPV/Hib |
| | Pneumococcal Conjugate 13 | Pneu-C-13 | Prevnar 13 |
| | Pneumococcal Conjugate 15 | Pneu-C-15 | Vaxneuvance |
| | Rotavirus | Rot-1 | Rotarix |
| | | Rot-5 | RotaTeq |
| | | Rota | N/A |
| | | | |
| 6 months | Diphtheria, Tetanus, Pertussis, Polio, Haemophilus influenzae type b | DTaP-IPV-Hib | Pediacel or Pentacel or Infanrix-IPV/Hib |
| | | | |
| 12 months | Pneumococcal Conjugate 13 | Pneu-C-13 | Prevnar 13 |
| | Pneumococcal Conjugate 15 | Pneu-C-15 | Vaxneuvance |
| | Meningococcal Conjugate | Men-C-C | Menjugate or NeisVac-C |
| | Measles, Mumps, Rubella | MMR | Priorix or MMR II |
| | | | |
| 15 months | Varicella | Var | Varivax III or Varilrix |
| | | | |
| 18 months | Diphtheria, Tetanus, Pertussis, Polio, Haemophilus influenzae type b | DTaP-IPV-Hib | Pediacel or Pentacel or INFANRIX |
| | | | |
| 4-6 years | Measles, Mumps, Rubella, Varicella | MMRV | Proquad or Priorix-Tetra |
| | Tetanus, Diphtheria, Pertussis, Polio | Tdap-IPV | Adacel-Polio; Boostrix-Polio |
| | | | |

Updated September 30, 2024

| | | | |
|---|---|---|---|
| Grade 7<br>Note: Meningococcal vaccine is mandatory for school attendance. | Hepatitis B | HB | Recombivax HB; Engerix- B; Twinrix (HAHB) or Prehevbrio |
| | Meningococcal Conjugate ACYW-135 | Men-C-ACYW | Menactra or Nimenerix or MenQuadfi or Menveo |
| | Human Papillomavirus | HPV-9 | Gardasil 9 |
| | | | |
| 14-16 years | Tetanus, diphtheria, pertussis | Tdap | Adacel; Boostrix |
| | | | |